Registered as a Newspaper

Zoology 87 A/L
திரு. நாகநாதன்
முலையியல்
Sat., Sun : 8.30-9.30
Tues., Thu: 3.00-5.00
பாகுபாடு
Sat. & Sun: 10.30-11.30
Saturday: 6.30-8.30
New Master
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

Botany 87 A/L
திரு. குகாதரன்
Sat. & Sundays
9 30-10 30
இனப்பெருக்கம்
2.30-3 30
பிறப்புரிமையியல்
New Master
Institute
B M.C. Lane, JAFFNA

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 6 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 18 (19-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 45

சடலங்கள் சிதறிச் சின்னபின்னம்:

# பதுளை பஸ்ஸில் குண்டு பயணிகள் ஐவர் பலி!

## உயிரிழந்தோர் எண்ணிக்கை உயரலாம் என அச்சம்

கொழும்பு, ஜனவரி, 19

பதுளையில் நேற்றுமாலை சுமார் 6-40 மணியளவில் வெடித்த பெரும் குண்டினால் பஸ் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தவர்களில் ஐந்து பேர் உடல் சின்னபின்னமாகி உயிரிழந்தனர். இருபத்தைந்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த பயணிகளில் பலர் ஆபத்தான கட்டத்தில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதால் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

பதுளையிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் ஹெட்டிபொல என்ற இடத்தில் இந்தப் பாரிய வெடிகுண்டு விபத்து நடந்தது

இ. போ. ச, பஸ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு பெரும் அதிர்வுடன் வெடித்ததாக கொழும்பில் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு அருகே குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக முதிகொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில்


(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா, பாலகுமார் இங்கு வந்ததன் மர்மம் என்ன?

### பாதுகாப்பு வட்டாரங்கள் தலையை உடைக்கின்றன

புதுடில்லி, ஜன.19

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஈரோஸ் தலைவர் திரு. பால



குமார் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருப்பதன் மர்மம் என்ன?

இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்களில் இக் கேள்வி பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி 'இந்து' நாளிதழ் முன்கண்டவாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரபாகரனின் வருகைக்கான உண்மைக் காரணம் என்ன?

உள்ளூர்த் தலைவர்களுக்கு இடையே நிலவுவதாகக் கூறப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க வந்தாரா?

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த வந்துள்ளாரா?

இந்திய அரசின் நெருக்கடியில் இருந்து தப்பிக் கொள்ளத்தான் வந்தாரா?

அல்லது இலங்கை அரசுப் படைகளுக்கு எதிராக பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த வந்தாரா?

இக்கேள்விகள் அண்மையில் நடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன என்றும் தெரிகிறது.

அந்தப் பாதுகாப்பு அதிகாரி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

''இரண்டுக்கும் நாம்



தயார். சமாதானத்திற்கும் நாம் தயாராக உள்ளோம், போருக்கும் தயாராக உள்ளோம்'' என்று தெரிவித்ததாக 'இந்து' செய்தி மேலும் கூறியது. (உ-ஐ-எ)

சிப்பாய்கள் 'அட்டகாசம்':

## பஸ் ஊழியர்கள் மீது ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன 19

ஆனையிறவு தடை முகாமில் நேற்று வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகளும், நடத்துனர்களும் சிப்பாய்களினால் தாக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 8-30 மணி அளவில் இத்தாக்குதல் நடைபெற்றது.

இதன் காரணமாக அச்சம் அடைந்த ஏனைய பஸ் சாரதிகள் சுமார் அரை மைல் தூரம் வரை ஏனைய பஸ்களை 'ரிவேர்சில்' ஓட்டிவந்தனர்.

நேற்றுக் காலை 8-30 மணியளவில் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பஸ் வண்டிகள் ஆனையிறவு முகாமில் சோதனைக்காக நிறுத்தப்பட்டன-

இதே வேளை பஸ் சாரதிகளையும் நடத்துனர்களையும் அழைத்த சிப்பாய்கள் 'கொட்டியா எங்கே' எனக் கேட்டுத் தாக்கினார்களாம்-

தொடர்ந்து வாகனங்கள் நின்ற பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நிகழ்த்திய சிப்பாய்கள் அதன்பின்னர் அவர்களை ஓடித் தப்புமாறு கூறினர்.

இதனையடுத்து அனைத்து வாகனங்களும் தொடர்ந்து போக்குவரத்து நடத்த முடியாமல் குறிஞ்சாத் தீவு வரை 'ரிவேர்சில்' வந்து பின்னர் யாழ்ப்பாணம் திரும்பின.

ஏற்கனவே நேரத்துடன் ஆனையிறவு சென்ற வவுனியா, மட்டக்களப்பு பஸ்கள் எதுவித சிரமமுமின்றி முகாமைக் கடந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## மேலிடத்துடன் தொடர்பு கொள்ள முயற்சி!

யாழ்ப்பாணம், ஜன. 19

ஆனையிறவு முகாமில் இ.போ.ச. பஸ் சாரதிகள் நான்குபேர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் டிப்போ சாலை முகாமையாளர் திரு. வி. எஸ். சொக்கலிங்கம் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பி. தர்மகுலசிங்கம், என். முத்துக்குமாரசாமி, சி. இராஜரத்தினம், எஸ். இராமலிங்கம் ஆகியோரே தாக்கப்பட்ட சாரதிகள் ஆவர்.

## மாதுறுஓயா முகாமை அகற்றக் கோருகிறது அமெரிக்க நிறுவனம்

கொழும்பு, ஜன.19

மாதுறுஓயாவில் உள்ள இராணுவ முகாமை விலக்கிக் கொள்ளும்படி ராஜாங்க அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாதுறு ஓயா அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் அமெரிக்க உதவி நிறுவனம் (யுஎஸ் எயிட்) இவ்வேண்டுகோளை விடுத்துள்ளது.

காரணம் மாதுறு ஓயாப் பகுதியில் உள்ள வனவிலங்குகளைக் கண்டபடி சுட்டுத் திரிகிறார்களாம், முகாமில் உள்ள சிப்பாய்கள்.

### சுபநேரம்

19-01-1987
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.35 முதல் 2.05 வரை
ராகுகாலம்:
8 05 முதல் 9 35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இப்போதும் இப்படியும் ஒரு சம்பவம்:

## தமிழ் கோஷ்டிகள் இரண்டு மோதின

### வீடுகள் உடைக்கப்பட்டன

அம்பாறை ஜன.19

பெரிய நீலாவணைக் கிராமத்தில் தமிழர் மத்தியில் உள்ள இரண்டு சமூகங்களுக்கு இடையேயான மோதலில் வீடுகள் உடைக்கப்பட்டன.

பதற்றத்தைத் தணிக்க கல்முனைப் பிரசைகள் குழுத்தலைவர் திரு ஆ.க வேல்முருகு தலைமையில் நேற்று சமாதானக் கூட்டம் ஒன்று நடந்தது.

உடைக்கப்பட்ட வீடுகளுக்கான நட்டஈட்டை இருதரப்பினரும் வழங்க வேண்டும் என்று சமாதானக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-எ-14)

### வழக்கறிஞர்கள் கண்டனம்

சென்னை, ஜன 19

எரிபொருள், உணவைத்தடை செய்து ஈழத் தமிழ்மக்களைப்படுகொலை செய்யும் முயற்சியைக் கண்டித்து சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் கண்டனத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு ஈழத் தமிழ் மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று கோரும் இன்னொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### அதிகாலையில் தேடுதல்

அக்கரைப்பற்று எட்டாம் வட்டாரத்தில் நேற்று அதிகாலை 5-30 மணி அளவில் பொலீஸ் கொமாண்டோக்கள் நடத்திய தேடுதலில் 18 தமிழர் கைது செய்யப்பட்டனர்,

வயலில் வேலைசெய்து கொண்டிருந்தவர்களே கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

நேற்று மாலைவரை இவர்கள் விடுவிக்கப்படவில்லை. (அ-எ)

### மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

எரிபொருள் தடையைக்கண்டித்தும் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று தமது வகுப்புகளைப் பகிஷ்கரிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

## தூர பஸ் சேவை இன்று நடைபெறுது?

யாழ்ப்பாணம், ஜன. 19

தூர இடங்களுக்கான வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இன்று நடைபெறுமா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

ஆனையிறவு இராணுவ முகாமில் நேற்று வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மீது சிப்பாய்கள் நடத்திய தாக்குதலின் எதிரொலியாகவே இச் சேவைகள் நிறுத்தப்படலாம் எனத் தெரிய வருகிறது.

மூன்று வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மீதே சிப்பாய்கள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

ஆயுதங்களினாலும், பொல்லுகளினாலும்தாம் தாக்கப்பட்டதாக தாக்குதலுக்குள்ளான ஊழியர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

சில ஊழியர்களின் தலையிலும், உடம்பிலும் காயங்கள் காணப்படுகின்றன. (உ-10)

எரிபொருள் தடையைக் கண்டித்து

## இன்று யாழ் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி

### போக்குவரத்து ஸ்தம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஜன 19

யாழ் குடாநாட்டுக்கு அரசு விதித்த எரிபொருள் தடையைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் நகரில் எந்தவிதமான போக்குவரத்துக்களும் நடைபெற மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

வட பிராந்திய மினி பஸ் போக்குவரத்துச் சங்கமே இந்தப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளது.

காலை 8 மணியளவில் கொக்குவிலில் உள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகும்.

இந்த ஊர்வலத்தில் மினிபஸ் உரிமையாளர்களையும் ஊழியர்களையும் கலந்து கொள்ளும்படி சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரதான வீதிகள் வழியாகச் செல்லும் இந்த ஊர்வலம் யாழ் செயலகத்தில் முடிவடையும்.

இந்த ஊர்வலத்தின் போது எரிபொருள் தடை காரணமாக மினி பஸ்களின் நிலைமையை எடுத்துக் காட்டுமுகமாக மினிபஸ் ஒன்றும் கட்டி இழுத்துச் செல்லப்படும்.

செயலகத்தில் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும். (உ-10)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக

## 'இரண்டில் ஒன்று' விரைவில் நிச்சயம் என்கிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜன 19

இனப்பிரச்சினைத் தீர்வாக 'இரண்டில் ஒன்று' இடம் பெறத்தான் போகின்றது. இதற்கு மக்களின் ஒத்துழைப்பை அரசு கோருகின்றது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார்.

சிலாபம் தொகுதியில் மாதம்பை என்னும் இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு.ஜெயவர்த்தனா மேலும்சொன்னதாவது;

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எம்மால் முடிந்தவு யோசனைகளைத் தெரிவித்து விட்டோம்.

இதற்கு மேல் சொல்வதற்கு எம்மிடம் ஒன்றுமே இல்லை.

இதற்குப் பின்னரும் தீவிரவாதம் தொடருமானால், மக்களைக் காப்பாற்ற நாம் இராணுவ நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். அந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



இரண்டில் ஒன்டாமோ? ஓ, அது எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம் தானே எந்த விஷயத்திலையும் அது இல்லாட்டில் இது. இதில என்ன புதிசாய் இருக்கு . . . !

## கோலாலம்பூரில் உலகத் தமிழர் மாநாடு

### மே மாதத்தில் நடக்கும்

சென்னை, ஜன.19

6ஆவது உலகத் தமிழர் மாநாடு கோலாலம்பூரில் மே 20 முதல் 24வரை நடைபெறும்.

உலக வர்த்தக நிலையத்தில் நடைபெறும் இந்த நான்கு நாள் மாநாட்டின் பிரதம அதிதியாக மலேசியப் பிரதமர் முகமது மஹாதீர், தமிழக முதலமைச்சர் எம், ஜி இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

'தமிழும் அறிவியலும்' என்ற தலைப்பில்ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

50 லட்சம் ரூபா செலவில் இம்மாநாட்டில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படும்.

இந்தியா, இலங்கை, மொறிஷியஸ், சிங்கப்பூர் மலேசியா, பிஜிதீவுகள், தென்ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்து கொள்வர் என்று எதிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத் தமிழரைக் காப்பாற்றுங்கள்!

## மதுரை மாநகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

மதுரை, ஜன. 19

ஈழத் தமிழர்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றும்படி இந்திய அரசைக் கோரி மதுரை மாநகரில் நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

மதுரை வடக்கு மாசி வீதியில் இருந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன், தி. மு. க, எம். எல் ஏ. திரு. பொன். முத்துராமலிங்கம் ஆகியோர் பேரணியை தலைமை வகித்து நடத்தினர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் பேரணியில் பங்குபற்றினர்.

ஜனதா, திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக், போர்வேட் புளொக் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

அ தி மு க, இந்திரா

(4ஆம் பக்கம் பார்க்க)

கொலன்னாவை குண்டு முயற்சி:

## டெலக்ஸ் நிறுவன ஊழியர் 4 பேர் கைது

கொழும்பு, ஜன. 19

கொலன்னாவை எண்ணெய்க் குத தகர்ப்பு முயற்சி தொடர்பாக பொலீஸார் கொழும்பிலுள்ள டெலக்ஸ் தொடர்பு நிலையத்தைச் சேர்ந்த நான்கு தமிழரை கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

இந்த நிலையம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானதாகும். (உ-ஐ-எ)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★


**தேவை**

அனுபவம் வாய்ந்த தொலைபேசி இயக்குநர் (இரவில் கடமையாற்றுவதற்கு) உடன் தேவை அனுபவ விபரங்களுடன் முழுமையான விண்ணப்பத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர். விளம்பர எண்: 49. மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

**இடமாற்றம்**

பாவனையாளர்களின் பாதுகாப்புக் கருதி பண்ணையிலுள்ள 2 ஆம் நம்பர் கோழிக்கடை ஆரியகுளம் சந்திக்கு மாற்றப்பட்டுள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

**வகுப்புகள்**

108, Brown Road, Jaffna A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 20-1-87 செவ்வாய் 6.30 A.M


புலோலி - அம்பன் பகுதிகளில்

# இலைச்சுருட்டி நோயால் நெல்வயல்கள் பாதிப்பு

பருத்தித்துறை, ஜன. 19

புலோலி, அம்பன் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலுள்ள நெல் வயல்களில் இலைச்சுருட்டிப் (மடிச்சுக்கட்டி) புழுவின் தாக்கம் பரவலாக அவதானிக்க முடிகிறது இப் புழுத் தாக்கத்தினால் நன்கு விளைந்த நெல் வயல்களின் விளைச்சல் சுமார் 20 - 25 சதவீதம் பாதிப்படையும் அபாயத்திலுள்ளதென அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு. வ பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிப்பதாவது:-

இந்த இலைச்சுருட்டிப் புழுவின் தாய்ப்பூச்சி ஓர் சிறிய அந்தாகும்.

இதன் முன் இறக்கை சடுக்கபிலநிற ஓரங்களையுடையது. இப் புழுக்களின் முட்டைகள் நெல்லின் இலை / தாள் நடுநரம்பின் இரு பக்கங்களிலும் அதிகமாக இருக்கும்.

இம் முட்டைகள் 15-17 நாட்களில் குடம்பிகளாக மாறுகின்றன. குடம்பிகள் நெல் இலையின் பரப்பைச் சுரண்டி பச்சயத்தை உண்கின்றன.

இவையே வயலின் வெள்ளை நிறப் பகுதிகளாகக் காய்ந்து நெரிகின்றன. இந்த இலைச்சுருட்டிப் புழுத் தாக்கத்தை உழவர்கள் விவசாயிகள் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இல்லையேல் உற்பத்தியில் பெரு வீழ்ச்சி ஏற்படும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 15 - 20 திரவ அவுன்ஸ் மொனோகுறட்டப்பொஸ் 60% செறி குளம்பை 40 – 60 கலன் நீரில் கலந்து தெளிக்கவும்.

இரண்டு கிழமையின் பின் மீண்டும் இக் குடம்பிகள் தோன்றுமாயின் திரும்பவும் இப் பூச்சி நாசினியைத் தெளிக்கவும்.

முக்கியமாக இப்பூச்சி நாசினியை விசிறும் பொழுது இலைக்கூடுகள் உடையும் வண்ணம் தெளிகருவியை கூடிய அமுக்கத்துடன் பாவிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது. (இ-118)

## ஐக்கிய நலன்புரி சங்கத்துக்குப் புதிய பணிமனை

யாழ்ப்பாணம், ஜன 19

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்துக்கு இதுவரை காலமும் இல்லாதிருந்த பணிமனைக் கட்டடம் ஒன்று இன்று திறந்துவைக்கப்படுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்துக்கான புதிய பணிமனைக் கட்டடம் ஒன்று பொங்கல் தினமான 14ஆம் திகதி சங்கத்தின் தலைவர் திரு. வை. செந்திநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே திரு. செந்திநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. சங்கத்துக்கு என்று ஒரு கட்டடம் இல்லாத குறை இன்றுடன் நீங்குகிறது.

அத்துடன் எமது உறுப்பினர்களின் நலனை முன்னிட்டு ஒரு வாசிகசாலையும், பாடசாலைப் பிள்ளைகளின் நலனை முன்னிட்டு ஒரு நூல் நிலையமும் வெகு விரைவில் திறந்து வைப்போம் என்றார்.

இதனைத் தொடர்ந்து சங்கப் பொதுச் செயலாளர் திரு செ குமாரசிங்கம், சங்கத்தின் வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறினார்.

மேலும் திருவாளர்கள் ஆ. நடராசா, பொன் வேல்முருகு. நா கனகசபை ஆகியோரும் உரையாற்றினர். (இ-10)

## பாடசாலைக்கு முன்னால் குப்பைமேடு

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியோரத்தில் குப்பை மேடு உருவாகி வருவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த விடுமுறை லீவு காலத்திலிருந்து ஆரம்பமான இந்தக்குப்பை மேட்டை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-161)

மானிப்பாய் கல்வி வட்டாரம்:

# மாணவர் அனுமதிகுறித்து காரசாரமான விவாதம்

மானிப்பாய், ஜன. 19

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டமை குறித்து மானிப்பாய் வட்டாரக் கல்விப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

இக்கல்வி வட்டாரத்தில் உள்ள சில பிரபல கல்லூரிகளில் மாணவர்களைச்சேர்த்துக்கொண்ட முறைகள் பற்றியும் அதனால் தமது பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றியும் கூட்டத்தில் சில அதிபர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

கூட்டம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் தலைமை வகித்தார்.

மானிப்பாயிலுள்ள சில பிரபல கல்லூரிகளில் ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு. ஆண்டு ஏழு தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கியமையால் அயல் பாடசாலைகளில் அவ் வகுப்புக்களுக்கான பிள்ளைகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து, போதிய பிள்ளைகள் இல்லாமையால் அவ் வகுப்புக்களை தாம் மூட வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளதாக சில அதிபர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயென் அதிபர்களின் கருத்து மோதல்களை சமாதானம் செய்யும் வகையில் பின்வருமாறு உரையாற்றினார்.

ஏனைய பாடசாலைகளுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தா வண்ணம் தமது பாடசாலைகளுக்கு மாணவர்களை அதிபர்கள் சேர்த்துக் கொள்வதில் விழிப்பாயிருக்க வேண்டும்.

பாடசாலை விடுமுறை நாட்களிலேயே பாடசாலை அனுமதி வேலைகளை பெற்றோர்கள் செய்து முடித்து விட வேண்டும்.

முன்னர் எமது அதிபர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் கல்வித் திணைக்களத்தினால் செய்யப்பட்ட முடிவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலை அனுமதிகள் நடைபெறவேண்டும்.

ஆசிரியர் வளம் வீண் போகாத முறையில் பாடசாலை அனுமதிகள் நடைபெற வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் வீண் குறைகளையும், தப்பபிப்பிராயங்களையும் அதிபர்கள் போக்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-90)

## தீவுப்பகுதியிலும் நாடகப்பயிற்சி நெறி

காவலூர் இலக்கிய வட்டம் முயற்சி

ஊர்காவற்றுறை, ஜன 19

தீவுப்பகுதியிலும் நாடக களப்பயிற்சியையும், விரிவுரைகளையும் நடத்த காவலூர் இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ளது.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு — யாழ் செயலகம் ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாடகம் தொடர்பானகளப் பயிற்சி-விரிவுரைகளுக்கு தீவுப்பகுதியிலிருந்து பலர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தும் ஒருவரும் அப்பயிற்சி நெறிக்கு தெரிவாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய போக்குவரத்து இடைஞ்சல்களைக் காரணம் காட்டியே அவர்கள் தெரிவாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆதலினால் தீவுப்பகுதியில் இவ்வாறான நாடகக் களப்பயிற்சியும், விரிவுரைகளும் நடத்துவதன்மூலம் நவீன நாடகங்களைப் பற்றியும், அவைகளில் புதிய யுக்திகளை கையாண்டு நெறியாள்கை செய்வதிலும் இங்குள்ளவர்களுக்கு போதிய அறிவை பெற்றுக்கொடுக்க முடியும் என காவலூர் இலக்கிய வட்டத்தின் தலைவர் திரு ஆ சபாரத்தினம் தெரிவித்தார். பல ஆண்டுகால அனுபவமும், அறிவும் உள்ளவர்களாலேயே இப்பயிற்சி அளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதையடுத்தே தீவுப் பகுதியில் நாடகப் பயிற்சிநெறியை ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. (உ-16)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

மீண்டும் சட்டவிரோத மின்பாவனை தலைதூக்குகிறது

# வடமராட்சியில் அடுத்தடுத்து மின்மாற்றிகள் வெடிக்கின்றன

பருத்தித்துறை, ஜன. 19

யாழ் மாவட்ட எரிபொருள் தடையை அடுத்து வடமராட்சிப் பகுதியில் பல மின்மாற்றிகள் பலத்த சத்தத்துடன் வெடித்துள்ளன.

அல்வாய், பாரதிதாசன் சனசமூக நிலையத்திற்கு முன்னால் உள்ள மின்மாற்றி உபய கதிர்காமத்திலுள்ள மின்மாற்றி, கூவில் வீதியிலுள்ள மின்மாற்றி ஆகியனவே பலத்த சத்தத்துடன் வெடித்துள்ளன.

இப்பகுதியில் விளக்கு எரிப்பதற்குக்கூட எரிபொருளைப் பெற முடியாத நிலை தொடர்ந்து இருப்பதால் இப்பகுதி மக்கள் சட்ட விரோத மின்பாவனையை நாடியுள்ளார்கள்.

இதனால் மின்மாற்றிகளின் பளு அதிகரித்து மின்மாற்றி வெடித்துள்ளன.

பல விவசாயிகளும் தமது விவசாயத்தேவைகளுக்கு சட்ட விரோத மின் பாவனையை நாடி வருகிறார்கள்.

இந்நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின் வடமராட்சிப்பகுதியில் பல கிராமங்கள் விரைவில் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்படுமென இப் பகுதி இளைஞர்கள் தெரிவிக்கிறார்கள் (உ-118)

## முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் திருமலையில்

அம்பாறை, ஜன. 19

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கிளைகள் திருகோணமலை மாவட்டத்தில் நிறுவப்பட்டன

மூதூர், சின்னக்கிண்ணியா, உப்பாறு ஆகிய கிராமங்களில் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கட்சியின் உபதலைவரும் பிரதேச அமைப்பாளருமான மௌலவி கே. எம். எச் காலிதீன் கிளைகளை நிறுவும் பணியில் ஈடுபட்டுவருகிறார்.

இதனிடையில் கல்முனை, நற்பட்டிமுனை இறக்காமம் பகுதிகளில் இம் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன (இ-ா-14)

## வவுனியாவில் புதிய தடுப்பு முகாம்

யாழ்ப்பாணம், ஜன.19

வவினியா மாவட்டத்தில் நேற்று புதிய தடுப்பு முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

வவுனியா – மன்னார் வீதியில் உள்ள காமினி வித்தியாலயத்துக்கு முன்பாக முன்னாள் மாவட்ட மந்திரி மகிந்த சோமாவின் இருப்பிடத்திலேயே முகாம் அமைக்கப்பட்டுள்ளது

நூற்றுக்கு மேற்பட்ட அதிரடிப் படையினர் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

காமினி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவே இந்த முகாம் அமைக்கப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனராம்

மன்னார் நோக்கிச்செல்லும் வாகனங்கள் இந்த தடுப்பு முகாமில் மறிக்கப்பட்டு சோதனையிடப்படலாம் எனத் தெரிய வருகிறது. (இ-10)

## நிவாரண உதவி: பலர் இழந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 19

திருமலை அகதிகளில் மேலும் பலர் நிவாரண உதவிகளை இழந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள திருமலைக் கிராம அகதிகள் பலருக்கு நிவாரணம் வழங்க புனர்வாழ்வு அமைச்சு இம் மாதம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

நூற்றுக்கணக்கான அகதிகள் இம் மாதம் முதல் நிவாரண உதவிகளை இழந்துள்ளனர் என அகதிகள் புனர்வாழ்வுத் தொடர்பு அதிகாரி திரு. கே. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (உ-5)

## வாவியில் துப்பாக்கிச் சூடு: 4 சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 19

குருக்கள் மடம் பகுதியில் வாவியில் சென்றுகொண்டிருந்த படகுமீது ஆயுதப்படையினர் சுட்டதில் உயிரிழந்து நீரில் மூழ்கிய 4 பேரின் சடலங்கள் சனியன்று மீட்டெடுக்கப்பட்டன.

இவர்களில் ஒருவர் பெண். ஒன்று குழந்தை. மற்ற இரண்டு பேரும் ஆண்கள். அனைவரும் தமிழர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலின்போது படகில் சென்ற பயணிகள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலே இவர்கள் மாண்டனர் என்று தெரியவருகிறது.

இதனிடையில் விசாரணைக்காக கைதுசெய்யப்பட்ட சுமார் 200 தமிழர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். (இ-எ-21)

## "பல்லைப் பாதுகாப்பது மிகவும் அவசியம்"

மானிப்பாய், ஜன. 19

பெண்களுக்கு மட்டுமல்ல, சகலருக்கும் அழகைத்தரும் ஓர் உறுப்பு பல். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் பல்லைப் பக்குவமாகப் பாதுகாக்க வேண்டும்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள இலவச பல்சிகிச்சை நிலைய வைத்தியர் திருமதி இராஜதுரை மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பாடசாலை வாரத்தில் 'பற் சிகிச்சை' பற்றி அவர் உரையாற்றினார்.

மேற்படி வித்தியாசாலை உபஅதிபர் செல்வி பு. கந்தையா இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

டாக்டர் திருமதி இராஜதுரை மேலும் பேசுகையில்,

ஆறுமாதத்துக்கொருதடவை உங்கள் பற்களைப் பல் வைத்தியரிடம் காண்பித்து பரிசோதனை செய்யவேண்டும்.

கூடியளவு பல்சூத்தை ஏற்படாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

பற்களைப் பிடுங்குவதன்மூலம் பல் உபாதைகளைத் தவிர்ப்பதைவிட பற்களை அடைத்துச் சுகம்பெற முயலவேண்டும்.

சிறுவர்களை இனிப்பு வகை. யூஸ் போன்றவற்றை அதிகளவில் உண்பதைத் தவிர்க்கவேண்டும்.

யூஸ் பாவிப்பது நாளடைவில் புற்றுநோயை ஏற்படுத்த வழிசெய்யும்.

சாப்பிட்ட பின்னர் தவறாது பிறஷ்' கொண்டு பற்களைத் தீட்டுதல் வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆசிரியை திருமதி ஐ. எஸ் சண்முகரத்தினம் நன்றியுரை கூறினார். (இ-90)

## மன்சூருக்கு வாழ்த்து தெரிவித்தனர்

பலாலி, ஜன. 19

யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றுள்ள ஜனாப் எம். எம். மன்சூரை இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. கே. சிவஞானம் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட அதன் உறுப்பினர்கள் யாழ் கல்விப் பணிமனை சென்று வாழ்த்தி வரவேற்றனர்.

தீவுப் பகுதியிலும் ... மாவட்டத்திலும் உள்ள ஆசிரியர்களது பிரச்சினைகள்பற்றி ... திரு. சிவஞானம் கலந்துரையாடினார். (இ-119)

## மக்கள் முகம்

### அண்ணாமலை மன்ற நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜன 19

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 29ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நல்லூர் ஸ்தான சி சி த. க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டவர்

தலைவர்: சங்கீதபூஷணம் திரு. க. கணபதிப்பிள்ளை. உபதலைவர்கள்: இசைமணி திரு க சித்திவிஞயகம். திரு க சொக்கலிங்கம் M. A. இணைச் செயலாளர்கள்: திரு. அ நமசிவாயம், சங்கீதபூஷணம் திரு ச பாலசிங்கம். பொருளாளர்: சங்கீதபூஷணத திரு. ஐ. வேலாயுதபிள்ளை. உப பொருளாளர்: சங்கீதபூஷணம் திரு. வ. பரமசாமி.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:-

சங்கீதபூஷணம் திரு. க வி. பரமலிங்கம், சங்கீதபூஷணம் திரு. வ. உருத்திரன். நவாலியூர் திரு. நா. சச்சிதானந்தன், திரு. க. குணராசா, திரு. சி. கா. சதாசிவம், சங்கீதபூஷணம் திரு. பொன். புஷ்பரத்தினம். திரு. மா முத்துக்குமாரு, செல்வி இராதாதேவி சபாபதி திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம், செல்வி ரமணி லோகநாதன்.

கணக்காய்வாளராகத் திரு. ச. கந்தவேள் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். (ஒ)

### விவசாய பாட ஆலோசகர்கள்

மானிப்பாய், ஜன. 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் விவசாய பாட ஆலோசகர்களாக ஐந்து ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்றது

ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பின்வரும் ஆசிரியர்கள் விவசாய பாட ஆலோசகர்களாக தெரிவுசெய்யப்பட்டு தமது கடமைகளை பொறுப் பேற்றுள்ளனர்.

இந்த ஐவர் விபரம் வருமாறு:-

திரு. கே. சண்முகநாதன் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திரு. கே செல்வக்குமாரன் - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை. திரு எஸ். இரத்தினசிங்கம் - கரம்பன் ஷேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை செல்வி. துரைராசா இராமநாதன் கல்லூரி, திரு. சி. கயிலைமான் - மகாஜன கல்லூரி தெல்லிப்பழை. (இ-90)

### இளைப்பாறினார்

சாவகச்சேரி, ஜன 18

கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய அதிபர் திரு வே. எஸ். பொன்னையா தமது 35 வருட ஆசிரியர் சேவையினின்றும் இளைப்பாறினார் (இ-31)

### உதவிகோர முடிவு

கரவெட்டி, ஜன. 19

சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அகதிகளின் புனர்வாழ்விற்கு உதவிகளைக் கோருவது என நெல்லியடி பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது. கடந்தவாரம் இடம்பெற்ற குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தை அரசாங்கம் வடபகுதிக்கு இடைநிறுத்தம் செய்துள்ள இன்றையநிலையில் சட்ட விரோத மின்பாவனையைத் தடைசெய்வதில் முழுக் கவனம் செலுத்தவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-70)

## உயர்வடைய உதவும் வைகுந்த ஏகாதசி

சாவகச்சேரி, ஜன. 19

வைகுந்தம், மோட்சம் என்ற நினைப்பில் நாம் உயர்வடைய, உளம்மகிழ வைகுந்த ஏகாதசி நமக்கு உதவுகிறது இதனை சொர்க்க வாயில் ஏகாதசி எனவும் அழைக்கின்றோம். மாதங்களில் சிறந்தது மார்கழி. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாள். மார்கழிப் பூரணையே பூரண கலையுடையது. 16 கலைகளும் நிறைந்த மாதம். இதனாலேயே கண்ணன் கீதையிலே மாதங்களில் நான் மார்கழி எனக் கூறிவைத்தார்.

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நுணாவில் முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற வைகுந்த ஏகாதசி விழாவில் சிறப்புரை வழங்குகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவின் நாமஜெபம், ஆரம்ப உரை ஆகியவற்றுடன் வைபவம் தொடங்கியது.

சிவத்தமிழ் செல்வி தொடர்ந்து உரையாற்றுகையில் இறை அருளைப்பெற நாமஜெபம் சிறந்த சாதனமாகும். ஒன்றுபட்ட நிலையில் வழிபாடு செய்யும்போது உண்மையில் இறை அனுபவத்தை உணர முடியும் என்றார்.

ஆத்மஜோதி ஆசிரியர் தமது ஆரம்ப உரையில்,

முருகன், கிருஷ்ணன் இருவரும் குழந்தைத் தெய்வமாக சைவர்களாலும், வைஷ்ணவர்களாலும் முறையே கொண்டாடப்படுபவர்கள்.

சிவனும், கண்ணனும் வேறல்ல. சிவம் சக்தி என்று கூறுவதுபோல் ஹரிகரன் என்போம். ஹரிகர லிங்கத்தையே இராவணன் பூசித்தான் என்றார்.

நான்குசாம பூசை, அபிஷேகம் ஆகியவையுடன் இடையிடையே இன்னிசை, கதாப்பிரசங்கம், கருத்துரைகள், நாமஜெபம், கூட்டு வழிபாடு ஆகியவை சிறப்புற இடம்பெற்றன. (இ-31)

## 'சத்தியங்கள்' வெளியீடு

கரவெட்டி, ஜன. 19

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மாடி மண்டபத்தில் நெல்லை க. பேரன் எழுதிய 'சத்தியங்கள்' என்னும் பதினேழு சிறுகதைகள் கொண்ட தொகுதியின் வெளியீட்டு விழா நடைபெறும்.

கலாசார கூட்டுறவுப் பெரு மன்றத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரபல எழுத்தாளர்களான யாழ்வாணன், தெணியான், கோகிலா மகேந்திரன், சி. வன்னியகுலம், செ. யோகராசா, செல்வி. சந்திரா தியாகராசா ஆகியோர் விமர்சன உரைகளை நிகழ்த்துகின்றனர்.

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு வே. தில்லைநாதன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக தனுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. வே இரத்தினசிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. வே. தங்கராசாவும் கலந்து கொள்கின்றனர். (உ-70)

## கெருடாவில் விவசாயிகள் பாதிப்பு

வல்வெட்டித்துறை, ஜன. 19

இடம் பெயர்ந்துள்ள கெருடாவில் விவசாயிகள் தமது கஷ்டநிலை குறித்துப் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

இராணுவ கெடுபிடி காரணமாக இடம் பெயர்ந்து அயல் கிராமங்களான உடுப்பிட்டி, இமையாணன் போன்ற இடங்களில் இவர்கள் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

இவர்களது நெருக்கடி நிலை குறித்து அரச அதிபரிடம் மனுக் கொடுக்கப்போவதாக கெருடாவில் பிரஜைகள் குழுப் பிரமுகர் தெரிவித்துள்ளார். (உ-160)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

விசுவாசமானது நம்பப்படுகின்றவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. — பைபிள்

உதயன்
உண்மை - விடுதலை - சுதந்திரம்
இல, 15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22075
யாழ்ப்பாணம் 19-01-1987 த. பெ இல 33

## நகர்க் கோலம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது அரசாங்கம் எரிபொருள் தடைவிதித்து இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன. மூன்றாவது வாரம் நடந்துகொண்டிருக்கிறது

எரிபொருள் இல்லாக்குறையால் வாழ்க்கையின் பல துறைகள் பாதிக்கப்படும் என்பதை ஏற்கனவே இப்பத்தியில் தெளிவுபடுத்தி இருந்தோம். அவற்றில் மக்களின் சுகாதாரமும் ஒன்றாகும்.

யாழ்ப்பாண நகர மக்களின் சுகாதாரத்துக்கு ஆபத்து ஏற்படும் கட்டம் நெருங்கிவிட்டது

நகர வீதிகளில் மூலைக்கு மூலை, முடக்குக்கு முடக்கு குப்பை கூளங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் பல்வேறு வகையான அசுத்தப் பொருள்கள். அவற்றிலிருந்து நோய் பரப்பும் கிருமிகள் உற்பத்தியாகும் ஆபத்து. பல நோய்களைக் காவித்திரியும் இலையான்கள், கொசுக்கள், நுளம்புகள் என்பன பல்கிப் பெருகிவிட்டன.

இலையான் மூலம் பரவும் வயிற்றோட்டம் நகர மக்கள் பலரை ஏற்கனவே பாதித்துள்ளது. இந்த நிலைமை நீடிக்குமானால், ஆபத்து விளைவிக்கக்கூடிய வேறு கொடிய தொற்றுநோய்களும் நகரில் பரவும் பேராபத்து உண்டு.

வீதிகளிலும் பொது இடங்களிலும் குப்பை கூளங்கள், அழுக்குப் பொருள்கள் தொடர்ந்தும் குவிக்கப்படுமாயின், பலவித கொடிய நோய்கள் நகர மக்களைப் பீடிப்பது நிச்சயம்.

யாழ்ப்பாண நகரில் நாளாந்தம் சராசரி 80 டிராக்டர் 'லோட்' குப்பைகூளம் சேர்வது உண்டு. ஆனால் எரிபொருள் தடையின் பின் குப்பை அகற்றப்படவில்லை. கடந்த சனிக்கிழமை வரை சுமார் 300 டிராக்டர் லோட் சழிவுகள் அகற்றப்படாமல் வீதிகளில் தேங்கிக் கிடக்கின்றன. இத்தகவல்களை யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்திருக்கிறார்.

எரிபொருள்தடை நீடிக்கும்வரை சழிவுப் பொருள்களை அகற்ற டிராக்டர்களைப் பாவிக்க முடியாது ஆகவே நகரமக்கள் ஒவ்வொருவரும் நிலைமையை உணர்ந்து கூடுமானவரை சமாளிக்கவேண்டும். குப்பை கூளங்களை வீதிகளில் கொட்டாமல் வளவுகளில் வெட்டிப் புதையுங்கள். அதற்கு இடமில்லையேல் அவற்றை எரியுங்கள். — இவ்வாறு வேண்டுகோளும் விடுத்திருக்கிறார் மாநர ஆணையாளர்.

இவ்விடயத்தில் நகர மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும் என நாமும் வலியுறுத்த விரும்புகிறோம்.

குடிமனைகள் நெருக்கமாக இருக்கும் நகரில், வீடுகளுக்கு அருகில் உள்ள வீதிகளில் சழிவுப் பொருள்கள் தேங்கிக் கிடந்தால் பாதிக்கப்படுபவர்கள் மக்களே.

நகரத்தின் சுகாதாரத்தைப் பேண வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு நகரவாசிக்கும் உண்டு. அதனால் அவர் தமது சுகாதாரத்தையும் உடல் நலனையும் பேணுவதோடு ஏனைய மக்களின் சுகாதாரத்தையும் உடல் நலனையும் பேண உதவுகிறார்.

இதனை எங்கள் மக்களில் பலர் சாதாரண காலத்திலும் உணர்ந்து கொள்வதில்லை. தங்கள் வீடு மட்டும் துப்புரவாக அல்லது சுத்தமாக இருந்தால் தாம் சுகாதார வாழ்க்கை வாழமுடியும் என நினைத்து விடுகிறார்கள். அதனால் தானோ என்னவோ, வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் குப்பை நாட்கணக்காக தேங்கிக் கிடந்தாலும் மேலும் தொடர்ந்து தமது வீட்டு அழுக்குகளை அதன்மேலேயே கொட்டி விடுகிறார்கள். தமது வீட்டுக் குப்பையை அள்ளிக் கள்ளத்தனமாக அடுத்தவன் வீட்டில் அல்லது வீட்டுக்கு முன்னால் கொட்டுவோரும் அதே ரகத்தைச் சேர்ந்தவர்களே.

இந்த ஆபத்தான கட்டத்திலும் குடியியல் உணர்வு இல்லாமல் நகர வாசிகள் நடந்து கொள்வார்களாயின் நாசம் அவர்களுக்கே. அதனை உணர்ந்து தமது வீடுகளையும் சுற்றுடலையும் சுத்தமாக வைத்திருக்க நகரவாசிகள் ஒவ்வொருவரும் செயலில் இறங்க வேண்டும்.

முழுப் பொறுப்பையும் மக்களிடமே விட்டுவிடாமல் மாநகரசபையும் நகரின் சுகாதாரத்தைப் பேண மாற்று நடவடிக்கை எடுப்பது அவசியம். டிராக்டர்கள் மூலம் வீதிகளில் இருந்து குப்பை கூளங்களை அகற்ற முடியாது எனின் தற்காலிகமாகவேனும் மாட்டுவண்டிகளைப் பயன்படுத்த முடியாதா?

பஸ் நிலையத்தை-வர்த்தக நிலையங்களை-உணவுச் சாலைகளை அண்டியுள்ள பகுதிகளில் சேரும் அழுக்குப் பொருள்களை கைவண்டி மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்க முடியாதா?

நோய் ஆபத்து பெரிதாக உருவெடுக்கு முன்னர் மாநகரசபையும், நகர வாசிகளும் அதனைத் தடுக்கப் பாடுபடவேண்டும். நோய் வந்தபின்னர் சிகிச்சை செய்வதைவிட நோய் வராது தடுப்பதே சிறந்ததாகும்.

## பாலர் பாடசாலை திறப்பு விழா

வல்வெட்டித்துறை, ஜன. 19

கலைமதி பாலர்பாடசாலைத் திறப்பு விழா பொங்கல் தினத்தன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவில் பிரதமவிருந்தினராக திரு. மு. சி. சிவித்தம்பி கலந்து, பாலர் பாடசாலையைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர்.

சிறப்பு விருந்தினராக திரு. ந. ஞானவேல் கலந்துகொண்டார்.

இவர்களைத் தொடர்ந்து செல்வன் வே. இராசலிங்கம், திரு. ம.

(4-ம் பக்கம் பார்க்க)

### கடாபி வேண்டுகோள்

திரிபொலி, ஜன 18

சாட் தேச ஜனாதிபதி ஹிஸ்னிஹாப்ரேக்கு எதிராக முஸ்லிம் புனிதப் போர் (ஜிஹாத்) தொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு லிபியத்தலைவர் கேர்ணல் கடாபி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம் சகோதரர்களுடன் இருந்து பிரிந்து ஹாப்ரே, கிறிஸ்தவர்களுடன் இணைந்துவிட்டதாகவும் கடாபி குற்றம் சுமத்துகிறார். (ஓ)

# வளைகுடா போர் உக்கிரம்

# தெஹ்ரான் மீது குண்டு

தெஹ்ரான், ஜன 18

கடந்த இரண்டு வருடகால வளைகுடா போரில் முதற்தடவையாக ஈரானின் தலைநகர் தெஹ்ரான் குண்டு வீச்சினல் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடா யுத்தம் ஈராக்கின் இந்தத் தாக்குதலால் மிகவும் மோசநிலை அடைந்துள்ளது என பி பி சி செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அயத்துல்லா கொய்மனியின் தலைமை அலுவலகத்தையே குறிவைத்து தாக்குமுயன்றதாக ஈராக் பின்னர் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலினல் 70 பேர் மரணமானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கட்டடங்கள் பல சேதமடைந்ததாகவும் ஈரான் அறிவித்தது (ஓ)

### வெளி உலகில்

### ஹெக்டே கருத்து

சென்னை, ஜன. 18

இலங்கைத் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும்பாதுகாப்பு வழங்கும் தீர்வு ஒன்று பேச்சுக்கள் மூலம் காணப்பட வேண்டும்.

-இப்படி கர்நாடக முதலமைச்சர் திரு.ராமகிருஷ்ணஹெக்டே சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)

### மத்திய பிரதேசத்தில் உலோகப் படிவுகள்

போபால், ஜன 18

இந்திய மத்திய பிரதேசத்தில் பெருமளவு தாதுப்படிவம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்தி ஐநூறு சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கும் மேல் இந்தப் படிவுகள் பரவியுள்ளதாகவும் எட்டாயிரம் தொன்னுக்கும் அதிகமான வெள்ளிப்படிவுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அணுசக்திக்கு மிகவும் பயன் உள்ள நியோடியம், ஸ்டென்டலம் உலோகப் படிவுகளும் அப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஓ)

### அமெரிக்க அரசு ஊக்கமளிக்காது

நியூயோர்க், ஜன 18

இலங்கையில் அமெரிக்கக் கூலிப்படையினர் இயங்குவதற்கு அமெரிக்க அரசு ஊக்கமளிக்காது.

இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-எ)

### 50 பேர் பலி

மணிலா, ஜன.18

பிலிப்பீன்ஸில் படகு கவிழ்ந்ததால் சுமார் 50பேர் நீரில்மூழ்கி மரணமடைந்தனர்.

சூடான் தீவுகளில் இவ்விபத்து நிகழ்ந்தது (ஓ)

### சூரியனை இயக்கும் அணுசக்தி

மாஸ்கோ, ஜன. 18

சூரியனை இயக்கக்கூடிய அணு செயற்கைச் சக்தி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சக்தி மூலம் விமானங்களையும் மோட்டார் வாகனங்களையும் இதர இயந்திரங்களையும் கூட இயக்கலாம் என நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி பேராசிரியர் நிக்கலாய் பேரசோவ் கருத்து வெளியிட்டுள்ளார். (ஓ)

### பாகிஸ்தான் அரசியல் வாதி கொலை

இஸ்லாமாபாத், ஜன.18

பாகிஸ்தான் இடதுசாரி அரசியல்வாதியான பாஸில் ராஹுல் இனந்தெரியாத நபர்களால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

50 வயதுடைய ராஹுல் அவாமிலீக் தேசியக் கட்சியின் உபதலைவராவர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவிற்கு எதிராக செயல்பட்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து வருட சிறைவாசம் அனுபவித்த ராஹுல் அண்மையில் விடுதலையானர். (ஓ)

### கராச்சியில் மோதல்கள்

கராச்சி, ஜன 18

கராச்சியில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனக் கலவரங்கள் ஏழாவது நாளாக நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

400க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 14 பேர் பலியானர்கள். (ஓ)

### பாக். விஜயம்

மாஸ்கோ, ஜன. 18

ரஷ்யாவின் உதவி வெளிநாட்டு அமைச்சர் பாகிஸ்தானுக்கு இன்று விஜயம் செய்வார்.

அனட்டாலி கொவின் கோவ் பாகிஸ்தானில் தங்கியிருக்கும் காலத்தில் ஆப்கானிஸ்தான் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்துவார் (ஓ)

## பனிக்கட்டியின் தொல்லை நீக்க கால்நடைகளின் சிறுநீர்

லண்டன், ஜன 18

ஹீத்ரோ விமான நிலையத்தில் உறைந்திருக்கும் பனிப்படிவங்களை அகற்றுவதற்கு விமான நிலைய அதிகாரிகள் மிருகங்களின் சிறுநீரை பாவித்து சிறந்த பலன் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

மிருகங்களின் சிறுநீர் இரசாயன உதவியுடன் படிமங்களாக மாற்றி இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது தினமும் பல்லாயிரக் கணக்கான மிருகசிறுநீர் இதற்காகச் சேகரிக்கப்பட்டு இரசாயன மாற்றம் செய்யப்படுகின்றது.

வழமையாக உபயோகிக்கப்படும் உப்புத்துகள்களை விமானங்களின் உறிஞ்சும் பகுதி எஞ்ஜினில் சேர்ந்து விடுவதாலேயே இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (ஓ)

## அணு ஏவுகணைத்திடலை 4 ஆயிரம் பேர் முற்றுகை

வாஷிங்டன், ஜன.18

அமெரிக்காவில் கடற்படை நவீன அணு ஏவுகணையை சோதிககவிருக்கும் திடலை நான்காயிரத்திற்கும் அதிகமானேர் ஆக்கிரமிக்க முயன்றனர்

புளோரிடா மாநிலத்தில் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது.

இந்தப் பகுதியில் வேலி ஏறித்தாண்டிய ஆயிரத்தி நானூறு பேர் கைது செய்யப்பட்டனர். பிரபல அணுஆயுத எதிர்ப்பாளர் பெஞ்சமின் ஸ்பாக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவராவர். (ஓ)

## இனப்பிரச்சினை தீர்வில் இலங்கை மெதுவாகவே ஈடுபடுகின்றது

புதுடில்லி, ஜன, 18

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் இலங்கை மெதுவாகவே ஈடுபடுகின்றது.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னர் என்று ஏ எப் பி செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது

எரிபொருள் தடையினல் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி நிலைமை குறித்து இந்திய அரசு மிகவும் அவதானத்துடனேயே கவனித்து வருகின்றது என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னர்.

இனப்பிரச்சினை விவகாரம் மோசமடைந்து வருவதாக அந்தப் பேச்சாளர் கவலை தெரிவித்தார் என்றும் ஏ.எப் பி. செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது. (இ-எ21)

## இலவச பாட நூல் விநியோகத்தில் சிக்கல்

கரவெட்டி, ஜன. 19

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் இலவச பாட நூல் விநியோகத்தில் பெரும் சிக்கல் தோன்றியிருக்கிறது.

உடுப்பிட்டி வட்டார பாடசாலைகள் அனைத்திற்கும் சுமார் ஒருஇலட்சம் புத்தகங்கள் தேவைப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது ஆனல் இதுவரை இவ்வட்டாரத்திற்கென இருபத்தாறுயிரம் புத்தகங்களே வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இப்புத்தகங்களை 30 பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆனல் பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் புத்தகம் வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

ஒரு மாணவருக்கு கொடுத்து அதே வகுப்பிலுள்ள வேறுமாணவருக்கு புத்தகத்தை கொடுக்காது விட்டால் பெரும்நெருக்கடி தோன்றும் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஆண்டு பத்திற்குரிய புத்தகங்கள் எதுவும் இவ்வட்டாரத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை

புத்தகப் பற்றுக்குறையினல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளதாக தெரியவந்துள்ளது (உ-10

## கல்விச் சீர்திருத்தம் குறித்து பெற்றோர் அறிந்திருக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஜன. 19

காலத்துக்குக் காலம் ஏற்படும் கல்விச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பெற்றோர் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். இவ்வருடம் ஆறும் ஆண்டின் பாடவிதானத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கமைய இவ்வகுப்பை இடைநிலைப் பாடசாலைகளுடன் சேர்த்துள்ளனர். சகல மாணவர்களும் ஆரம்பக்கல்வியை ஆரம்பப் பாடசாலைகளில் இடநெருக்கடியின்றிப் பெற இம்மாற்றம் உதவுவதுடன் ஆறும் ஆண்டு மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், சமூகவியல் போன்ற பாடங்களை விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடம்படித்துப் பயனடைய வழிவகுக்கும்.

யாழ் இணுவில் இந்து வித்தியாலய அதிபர் க. கணேசதாசன் அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் 'எங்கள் வித்தியாலயம் எட்டாம் ஆண்டு வரை இயங்கும் தொடக்க நிலைப்பாடசாலையாக யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரால் தரமுயர்த்தப்பட்டுள்ளது' என்றார்.

இறுதியில் செயலாளர் க. சிவகுரு ஆசிரியர் நன்றி கூறினர். (இ)

### வாசகர் திருமுகம்

## தமிழர், முஸ்லிம் ஐக்கியம் வேண்டும்

உண்மையில் மொழியாலும், வாழிடத்தாலும், பொருளாதார சூழ்நிலைகளினலும் பின்னிப் பிணைந்து சகோதரர்போல் பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டால்—ஐக்கிய வாழ்வில் துணிந்தால்—எம் மத்தியில் சுபீட்சமும் சமாதானமுமான வாழ்வும் மலரும்

தமிழ்ப் பெரும் தலைவர்களான அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், அமரர் எஸ். ஜே வி செல்வநாயகம் போன்ற தேசியத் தமிழ்த் தலைவர்களின் தாரக மந்திரமும் ''தமிழரும் முஸ்லீம்களும் இணை பிரியாது வாழ்வதொன்றே'' என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார், யாழ்ப்பபணம், கொழும்பு, மட்டக்களப்பு, தென் இந்தியா ஆகிய இடங்களில் எல்லாம் இன்றும் இரு சமூகங்களும் இணைந்து வாழ்ந்துகொண்டிருப்பது கண்கூடு

எனவே, தாமதமின்றி இரு இனமும் ஒன்றை ஒன்று நம்பி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வுக்கு அடிகோலுவது இன்றுள்ள தேவையாகும்.

இது நிகழுமானல் நம் தாய்நாட்டு மக்கள் ஐக்கியமாகவும், சுயதேவையைப் பூர்த்திசெய்து சமத்துவமாகவும் வாழ்வதற்கு வழிபிறக்கும்.

பிரித்து வாழும் வல்லரசுக் கொள்கையும், பேரினவாதமும் தோல்வி[illegible] தவர்களாவோம்.

வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை-இளவாலை

### பஸ் நிலையத்தில் இருந்து மீண்டும் பஸ்

யாழ்ப்பாணம், ஜன.19

தூர இடங்களுக்கான வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் அனைத்தும் [illegible] புதிய பஸ் நிலையத்தில் [illegible] பட்டன. (இ-10)



### பொய்யாமொழி

குறள்:

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்

பொருள்:

ஒருவன் ஒன்றை விரும்புவதனல் பிறவா நிலைமையை விரும்பவேண்டும்; அது அவா அற்ற நிலையை விரும்பினல் உண்டாகும்.

### செய்திக்கொத்து

### விவேகானந்தர் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜன.19

சுவாமி விவேகானந்தர் ஜெயந்திவிழா இம்மாதம் 22 ஆம் திகதி மாலை ராமகிருஷ்ணலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

நிறைவாழ்வினை வாழ்ந்து காட்டிய சான்றோர் வரிசையில் சுவாமி விவேகானந்தர் என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

துணை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன், திரு ப. கணேசலிங்கம் ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொள்வர்.

செல்வி தனலட்சுமி இராமச்சந்திராவின் இசைவிருந்தும் இடம் பெறும். (இ-எ)

### யூனியன்கல்லூரி மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், ஜன 19

கடந்த வருடம் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் நா சுகந்தன் 372 புள்ளிகளைப் பெற்று கணிதப்பிரிவில் ஒரு சாதனை நிலைநாட்டினர்.

இதே கல்லூரியில் உயிரியல் பிரிவில் ஜி உமையோன், செல்வி செ. மேரிசுருபினி ஆகிய இருவரும் 295 புள்ளிகளையும் எஸ். ராதை 293 புள்ளிகளையும் பெற்றனர்.

வர்த்தகப்பிரிவில் எஸ். கல்யாணி 287 புள்ளிகளையும், கலைப்பிரிவில் ரி, பிறேமளா 261 புள்ளிகளையும் பெற்றனர் (இ-5)

### குருக்கள் வீட்டில் கொள்ளை

சாவகச்சேரி, ஜன 19

கோயில் குருக்கள் வீட்டில் தங்க நகைகளும் ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டன.

நுணாவிலில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேலாகும் எனக் கூறப்படுகிறது.

வீட்டிற்கு வெளியே ஒருவர் இருக்க நால்வர் ஆயுதங்களுடன் உள்ளே வந்து இக்கொள்ளையை நடத்தினர் என வீட்டார் தெரிவித்தனர்.

சந்தேகத்தில் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் (இ-31)

### தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன 19

வீட்டில் இருக்கும் பெண்களின் நலன்கருதி இருபிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தால் அண்மையில் தையல் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புக்கு எதிர்பார்த்தளவைவிட அதிகளவு பெண்கள் அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளனர். (உ)

### திறப்பு விழா

விசுவமடு, ஜன. 19

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச பொருளாதார அபிவிருத்திக் சழகத்தின் அலுவலகத் திறப்புவிழா பொங்கல்தினம் முரசுமோட்டையில் நடைபெற்றது.

கிளிநொச்சிப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் கா. வேலாயுதமும், பிரதேச பொருளாதார அபிவிருத்திக் சழகத்தின் பொருளாளர் ப. ஸ்ரீ அனந்தராசாவும் மங்கள விளக்கை ஏற்ற, நவஜீவனம் த கிருபானந்தராசா சம்பிரதாய பூர்வமாக அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (இ-166)

### நிதி ஒதுக்கீடு

கரவெட்டி, ஜன 19

கரவெட்டி மத்தி ஐக்கிய நாணய சங்கத்திற்கென நாற்பத்திஐயாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விசேட சேவை உத்தியோகத்தர் திரு. வ. சிவபாலன் தெரிவித்துள்ளார். (உ-70)

### அதிபர்கள் கூட்டம்

கரவெட்டி, ஜன.19

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிபர்களின் கூட்டம் அடுத்தமாதம் 3ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இராஜலிங்கம் மண்டபத்தில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க.சுஸ்வரபாதம் தலைமையில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

BITSMANS INSTITUTES
MANIPAY
பிற்மன் இலண்டன் பரீட்சைக்குரிய
சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயிற்சி
முழு பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்: 21-01-87 புதன் — 8-30 a.m.
Spoken English
WITH GRAMMAR
பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
ஆசிரியர்: M M. தேவராஜா
நேர அட்டவணை: Sat Sun. Wed. - - 5-00 p.m.

# உதயன்

19 - 01 - 1987 திங்கட்கிழமை

BITSMANS INSTITUTES
MANIPAY
4-வது பிரிவு (O/L) கல்வி ஆண்டு
10ம், 9ம், 8ம், 7ம், 6ம்
வகுப்புகளுக்குரிய
சகல பாடங்களும், எமது வழமையான
SUPER GRADE
ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது
ஆரம்பம்: 21-1-87 புதன் 3-30 p.m.

விஜேயுடன் போகவே விருப்பம்:

## திருமலை எமது சொந்த இடமல்ல

### அரசுதான் அங்கு எங்களைக் குடியேற்றியது

### புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள மீனவர்கள் தகவல்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, ஜன. 19

நாம் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மீனவர்கள் அல்லர்! அங்கு அரசினால் குடியேற்றப்பட்டவர்கள்.

தற்போது வடபகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பில் உள்ள மூன்று சிங்கள மீனவர்களும் மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து இயந்திர மீன் பிடி வள்ளம் ஒன்றில் மீன் பிடிக்கப் புறப்பட்ட இம் மூவரும் முல்லைத்தீவு, தாளையடி கரையில் ஒதுங்கினர்.

அப்பகுதி மக்களினால் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

மூவரின் விவரங்கள் வருமாறு;

1. கே. பி. லீலசேன, வயது 36 மூன்று பிள்ளைகளின் தந்தை.

2. எம்.எச் லான்டிஸ், வயது 42. 6 பிள்ளைகளின் தந்தை.

3. ஆர்.பி. அனுரசிறி, வயது 14.

லீனசேனவிற்கு ஓரளவு தமிழ் தெரியும். உதயன் செய்தியாளர் பேட்டி காணச் சென்ற சமயம் மூவரும் புது ஆடைகள் அணிந்தபடி வெகு உற்சாகமாக இருந்தனர்.

சிங்களம் தெரிந்த புலிகள் இயக்கப் போராளிகள் இவர்களைப் பேட்டி காண உதவினர்.

கடந்த 7 ஆம் திகதி காலை 7 மணி போல் இவர்கள் மீன் பிடிக்க திருமலையில் இருந்து புறப்பட்டனர்.

அன்று இரவு வலைகளைக் கடலில் போட்டு விட்டு உறக்கத்தில் இருந்தபோது வள்ளம் நீரோட்டத்தில் இழுபட்டுச் சென்றது.

நீரோட்டத்துடன் எதிர் நீச்சல் போட முடியாத நிலைக்கு இவர்கள் ஆளாகினர்.

அடுத்த நாள் காலை அவர்கள் பனைமரங்களையும் ஓலைக் குடிசைகளையும் கரையோரத்தில் கண்டனர்.

ஓலைக் குடிசைகள் காணப்பட்ட கரையை நோக்கி அவர்கள் வள்ளத்தைச் செலுத்தினர்.

முல்லைத்தீவு, தாளையடிக் கடற்கரையை வள்ளம் அடைந்தது.

பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

''புலிகள் எம்மை நல்லபடி உபசரித்து வருகின்றனர். எம்மை எமது சொந்த இடத்துக்கு அனுப்பி வைக்க புலிகள் தயாராக இருக்கின்றனர். நாம் தான் இராணுவக் கெடுபிடிக்குப் பயந்து, ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜயகுமாரணதுங்காவின் பாதுகாப்பில் செல்ல விரும்புகின்றோம்'' --இப்படி கே. பி லீலசேன சொன்னார்.

''நாம் பாதுகாப்புடன் எமது இருப்பிடம் செல்ல திரு விஜயகுமாரணதுங்க உதவ வேண்டும்'' -- என்று மூன்று சிங்கள மீனவரும் வேண்டிக் கொண்டனர். (உ-எ-160)

## புலிகளும மாட்டு வண்டி பயணம்

வல்வெட்டித்துறை. ஜன. 18

வடமராட்சிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளும் மாட்டு வண்டில் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்.

வடபகுதிக்கு எரிபொருள் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாகனப் போக்குவரத்துக்கு நெருக்கடி தோன்றியிருக்கிறது.

மக்கள் பிரயாணக் கஷ்டங்களை உணர்ந்த புலிகள் தாமும் மக்களின் கஷ்டங்களில் பங்கு கொள்ளும் முகமாக மாட்டு வண்டில்களைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

புலிகள் மட்டுமல்லாமல் அனேக பொது மக்களும் தற்போது மாட்டுவண்டிச் சவாரியை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

விவசாயிகள் மீண்டும் நீர் இறைக்க துலா மாடு பூட்டிய சூத்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். (உ-160

## காமினியின் விஜயத்தால் மேலும் குழப்ப நிலை!

புதுடில்லி, ஜன. 19

அமைச்சர் காமினி திஸநாயக்காவின் புதுடில்லி விஜயத்தில் கிடைத்தது என்ன?

வெறும் குழப்பநிலை தான் மிஞ்சியது.

பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் அது பற்றி விவரமாகத் தெரிவித்து இருக்கிறார்.

இந்திய வெளியுறவு அமைச்சுத் தெற்காசியப் பிரிவின் 'உத்தியோகபூர்வமற்ற பேச்சாளராக'க் கருதப்படுபவர் திரு. ரெட்டி.

அவர் எழுதியிருப்பதாவது:

டிசம்பர் 19க்குப் பின்னர் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குழப்ப நிலையை அடைந்தன.

அமைச்சர் காமினி திஸநாயக்கா புதுடில்லியில் இணை அமைச்சர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் நிலைமை இன்னும் குழம்பியுள்ளது.

டிசம்பர் 19 இல் அம்பாறைத் தொகுதியை விலக்கிய கிழக்கு மாகாணம் என்று ஜனாதிபதி அளித்த உறுதி மொழியில் இருந்து நாம் விலக மாட்டோம் என்று அமைச்சர் காமினி திஸநாயக்கா புதுடில்லிச் சந்திப்பில் உறுதியளித்தார்.

ஆனால் இன்னொன்றையும் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவிக்கத் தவறவில்லை.

போராளிகளின் வன்செயல்களினால் அம்பாறைத்தொகுதி இல்லாத கிழக்கு மாகாண யோசனையை எப்படி சிங்கள மக்களை ஏற்றுக்கொள்ள வைப்பது என்பதுதான் இலங்கை அரசுக்குள்ள பிரச்சினை என்றும் அமைச்சர் திஸநாயக்கா கூறியிருக்கிறார்.

இதனால் இனப்பிரச்சினை மேலும் குழப்ப நிலையை அடைந்திருக்கிறது.

—இப்படி திரு ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார். (உ-ஐ-எ)

## எரிபொருள் தடையை நீக்கக் கோருகிறது இந்துக் கவுன்ஸில்

கொழும்பு, ஜன. 19

எரிபொருள் தடையை நீக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுங்கள்.

இந்துஸ்தாபனங்களின் கவுன்ஸில் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, அரசுக்கு இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது துரதிஷ்டவசமானது.

யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையினரான தமிழர் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இல்லை என்று அரசு கூறுகிறது.

அப்படியானால் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இல்லாத பெரும்பான்மைத் தமிழரையும் எரிபொருள் தடைபோட்டு ஏன் அரசு பழிவாங்க வேண்டும்?

இப்படி திரு. துரைசுவாமி, அரசுக்கு விடுத்த வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார். (அ-எ)

## பொங்கல் பரிசு பெல்ட் அடி!

அம்பாறை, ஜன 19

அம்பாறை அட்டபள்ளம் கிராமத்தில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் 30 தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு 'பொங்கல் பரிசாக' பெல்ட் அடி தான் கிடைத்தது.

நடந்தது இது தான்:-

தைப்பொங்கல் அன்று ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலில் சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 15 முஸ்லிமும் 17 தமிழரும் களுவாஞ்சிக்குடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

முகாமில் நித்திரையில் இவர்களில் சிலர் அதிகாலை 3 மணியளவில் விழித்தெழுந்து விட்டனர்.

அந்த நேரம் வந்த இராணுவ அதிகாரி ஒருவர் அவர்களைப் பார்த்து' நித்திரைக்குப் போங்கள்' என்று சிங்களத்தில் உத்தரவிட்டார்.

இது முழித்து இருந்த தமிழருக்கு விளங்கவில்லை.

நித்திரையில் இருந்த ஏனைய தமிழரையும் தட்டி எழுப்பி விட்டனர்.

சிங்களத்தில் உத்தரவிட்ட இராணுவ அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது

பெல்டைக் கழற்றி அத்தனை பேருக்கும் 'பொங்கல் பரிசு' கொடுத்தார்.

மொழி தெரியாததால் விழித்து இருந்தவர்கள் பெல்ட் அடியினால் முழி பிதுங்கும் நிலைக்கு ஆளாகினர். (உ-எ-14)

விற்பனைப் பகுதி ஊழியர் விவகாரம்

## தலையிட்டு உதவ கலவான எம். பியிடம் கூட்டுக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 19

யாழ் விற்பனைத் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வேலை நிறுத்த அறிவித்தலை மேற்படி திணைக்கள தலைமை அலுவலகம் வாபஸ் பெறச் செய்ய தலையிட்டு நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு கலவானைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டியூ. குணசேகராவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ் விற்பனைத் திணைக்கள ஊழியர்கள் எழுபத்தொரு பேர் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டதை வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் மாத்திரம் இப்படியான வேலைநீக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது சம்பந்தப்பட்ட 71 ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்ட திடீர் வேலைநீக்க அறிவித்தல் உடன் வாபஸ் பெறப்படவேண்டும். அல்லது அவர்களுக்குரிய நஷ்டஈடும் பணிக்கொடையும் வழங்கப்படவேண்டும் எனவும் கூட்டுக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

## துக்கம் அனுஷ்டிப்பு

வல்வெட்டித்துறை 18

கடந்த சனியன்று ஆனைபிறவில்இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் உயிர் நீத்த புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, போன்ற இடங்களில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன சோக கீதங்களும் ஆங்காங்கே இசைக்கப்பட்டன.

## சமாதானத்தை விரும்புவோர் பொது நலனையும் ஏற்கவேண்டும்

### உலக சமயதின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 19

சமாதானத்தையும் நீதியையும் விரும்பும் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு நாடும் ஒற்றுமையையும், பொதுநலனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் இவ்வாறு கூறினார்.

நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற உலக சமய தின விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்வாறு ஆணையாளர் கூறினார்.

'சமாதானத்திற்கு சமயம்' எனும் பொருள் பற்றி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் உரையாற்றுகையில்-

சமயமானது பேசப்படுவதற்கான ஒன்றல்ல; அது வாழப்படுவது. வாழ்க்கைக்கு வழி காட்டுவது.

சமயம் மனிதனோடு இரண்டறக் கலந்தது என்றார்.

வண. பிதா க. போ. கோவிந்தராஜ் உரையாற்றுகையில் --

சமாதானம் என்பது பூரணமான வாழ்க்கையையே குறிப்பிடுகின்றது. அதன் மார்க்கத்தையே அது காட்டுகின்றது-- என்றார்.

ஜனாப். மௌலவி எஸ். எச். கலீலுர் ரஹ்மான் உரையாற்றுகையில் --

விரக்தியின் நிலையிலேயே மனிதன் மதத்தின் மீது அதிக நம்பிக்கை வைக்கிறான். இது தவறு என்றார்.

பஹாய் சமய பிரமுகர் திரு. கே சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் —

மனிதனின் இன்றைய இழிநிலைக்கு காரணம் துவேச மனப்பான்மையே. சமய, எல்லை, வகுப்பு, நிற, மத, இன, மொழி துவேசங்களை விலக்கினால் சமாதானமானது உலகில் நிலவும் என்றார்.

உலக சமயதின நிகழ்ச்சிகளை பஹாய் சமய தேசிய ஆன்மீகக் குழு சார்பில் திரு செ. மகேசு நெறிப்படுத்தினார். (உ-5)

## நட்வர்சிங் மாஸ்கோ பயணம்

புதுடில்லி, ஜன 19

இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று (ஞாயிறு) மாஸ்கோ பயணமானார்.

இருதரப்பு விஷயங்கள் குறித்துப்பேச்சுக்கள் நடத்துவதே அவரின் விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது

இவர் மூன்று தினங்கள் மாஸ்கோவில் தங்கி இருப்பார். (உ எ)

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 19

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் கமிட்டிக் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு காலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

இணைப்புச் செயலாளர் திரு. ச. சிவானந்தராசா இத்தகவலை வெளியிட்டார். (உ-எ)

## நாடகத்தின் மூலம் மனோநிலைக்கு பலம்

### பயிற்சி வகுப்பில் உரை

வட்டுக்கோட்டை, ஜன 19

நாடகம் மூலம் சில மனோநிலைகளுக்கு பலம் கொடுக்கப்படுகிறது

நாடக நடிப்பு என்பது வெறுமனே பாவனை செய்வதல்ல. அது உள்ளத்திலிருந்து வெளிப்படுவது.

பேராசிரியர் கா சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாவட்டக்கலாசாரப் பேரவை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவுடன் நடத்திய நாடகம் பற்றிய விரிவுரைகளும் களப்பயிற்சியும் யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் கூட இதுவரை தமிழ்நாடகத்துக்கான துறை ஏற்படுத்தப்பட வில்லை.

ஆனால் யாழ் பல்கலைக் கழகத்திலேதான் நாடகத்திற்கென தனியான துறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நாடகம் என்பது ஒரு கூட்டுக்கலை. இதனை மனிதர்களின் கூட்டுணர்வுக் கலை என்றும் சொல்லலாம்.

நாடகம், அரங்கியல், மனிதனைச் சித்திரிக்கிறது மனித நடவடிக்கைகளை மனிதனைப்பார்க்க வைக்கும் கலை நாடகம் இப்படி திரு. சிவத்தம்பி மேலும் கூறினார்.

யாழ் உதவி அரசாங்க அதிபரும் யாழ் கலாச்சாரப் பேரவைச் செயலாளருமானதிரு.ச. பொபாலசிங்கம் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

யாழ் அரசாங்க அதிபரும் யாழ் கலாசாரப் பேரவைத் தலைவருமான திரு. வை.மு பஞ்சலிங்கம், யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி திரு நா பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆரம்ப உரைகளை நிகழ்த்தினர். (உ-161)

## பரத நடனப் பயிற்சி 25 மாணவியர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்மாவட்டக் கலாசார பேரவை நடத்தும் பரதநடனப் பயிற்சி வகுப்புக்கு 25 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

பயிற்சி வகுப்பு நாளை மறுநாள் புதன்கிழமை காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பம் செய்யப்படவுள்ளது.

பயிற்சி வகுப்பில் சேர்ந்துகொள்ள 90பேர் விண்ணப்பித்து இருந்தனர்.

மாநிலக் கல்விப்பணிப்பாளர் தலைமையிலான ஒரு குழுவே விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது.

வடஇலங்கை சங்கீத சபை நடத்திய பரீட்சைகளில் 3 ஆம் தரத்தில் சித்தி எய்திய மாணவிகள் 25 பேரே இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்புட்ட 25 மாணவிகளின் பெயர்கள் வருமாறு;

இந்துமதி சின்னராஜா, (சுன்னாகம்), சூரியகலா மயில்வாகனம் (உரும்பராய்), சூரியகலா செல்லையா (கரவெட்டி), விமலலோசனி இராஜதுரை (மானிப்பாய்), கமலராணி சிவஞானசுந்தரம் (சுழிபுரம்). மிருணாளினி சிவஞானம் (சாவகச்சேரி) ஹரிசந்திரிகா சுப்பிரமணியம் (பண்டத்தரிப்பு) செல்வமலர் தியாகராஜா (சுழிபுரம்) மனோரதி நவரத்தினம் (அளவெட்டி) அருணாதேவி நடனசபாபதி (இணுவில்)

அமுதமலர் கோபாலகிருஷ்ணன், (பரவஷ்யூர்) சந்திரவதனி தனேந்திரன் (கந்தர்மடம்) விமலகுமாரி ஏரம்பமூர்த்தி (மீசாலை), வாசுகி ஞானச்செல்வன் (நல்லூர்) தனலட்சுமி தர்மலிங்கம் (சுழிபுரம்)

ஹேமலதா ஐயம்பிள்ளை, (சுன்னாகம்) சிவானி கணேசமூர்த்தி (தெல்லிப்பளை) இந்துமதி விவேகானந்தன் (சாவகச்சேரி) மாலதி மயில்வாகனம் (அளவெட்டி) பிரேம்ராணி சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்)

யசோதா சிங்காரத்தினம் (உரும்பராய்) ஜிட்னெஸ் செல்லையா(கொக்குவில்) சிவகலை சிவசுப்பிரமணியம் (உரும்பராய்) சுஜீவி மகாதேவன் (வட்டுக்கோட்டை) தனுஜா துரைரத்தினம், (அரியாலை)- (உ-எ)

## பிரதமருக்கு சிறை

அங்காரா, ஜன.18

துருக்கியின் முன்னாள் பிரதமர் எட்ஜாலிக் அரசியல் தடைகளை மீறிய குற்றத்திற்காக 11 மாத கால சிறைத்தண்டனை பெற்றார்.

பாலர்-----
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கணேசலிங்கம், திரு க. இராமச்சந்திரன், திரு. க. செல்வநாதன், திரு. சி. சுந்தரலிங்கம், திரு. மு. சின்னத்துரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

செல்வி. க. சந்திரா நன்றி உரை நிகழ்த்தினார். (இ-160)

பதுளை...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த ஐவரின் உடல்களும் நாலாபுறமும் சிதறி சின்னாபின்னமாகிக் கிடப்பதால் அவர்களை அடையாளம் காண்பது கஷ்டம் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

'இரண்டில்...
1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஏற்பட்டுள்ளது

விரைவில் இரண்டில் ஒன்று நிச்சயம் இடம் பெறத்தான் போகின்றது இதற்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அரசுக்கு வழங்க வேண்டும்

1971இல் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க நாமும் எதிரணியில் இருந்து உதவினோம்.

இன்று தமிழ்த்தீவிரவாதம் சர்வதேச அரங்குக்குச்சென்றுவிட்டது.

தீவிரவாதம் உலக நாடுகளில் உள்ளது இந்தியாவிலும் தீவிரவாதம் நிலவுகிறது.

இனப்பிரச்சினைக்கான எமது யோசனைகளை தீவிரவாதிகள் புறக்கணித்து விட்டனர்.

இதை இனியும் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது.

-இப்படி திரு ஜெயவர்த்தன தெரிவித்தார். (உ-ஐ-எ)

மதுரை மாநக..
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஆகியன இப்பேரணியில் கலந்து கொள்ளவில்லை.

''ஈழத்தமிழ் மக்களைப் பட்டினி போடாதே!''

''எரிபொருள் தடையை நீக்கு!''

''இந்திய மத்திய அரசே! ஈழத் தமிழ் மக்களைப் பட்டினிப் படுகொலைக்கு ஆளாக்காமல் காப்பாற்று!

மேற்கண்ட சுலோகங்களைக் கோஷித்த வண்ணமும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும் மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

அ. தி. மு. க, இந்திரா காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகள் இலங்கைத் தமிழருக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கும்படியும் இந்திய அரசாங்கத்தைத் தலையிடும்படி கோரியும் 7 நாள் ஆர்ப்பாட்டப் பேரணி, கண்டனப் பொதுக் கூட்டங்களை தமிழகம் எங்கும் நடத்துவது என்று தீர்மானித்து இருந்தன என்பது தெரிந்ததே.

அதன்படி முதலாவது நாளான நேற்று மதுரை மாநகரில் இப்பேரணி நடைபெற்றது. (உ-ஐ-எ)

கோலாலம்பூரில்..
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

இத்தகவல்களை உலகத் தமிழர் சம்மேளனத் தலைவர் திரு. வி. டேவிட் உப தலைவர்திரு டி. ஆர். துரைசிங்கம் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள். (உ-எ)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

## யோண் பிலிப்



தோற்றம்:
1 - 05 - 1893

மறைவு;-
19 - 01 - 1985

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மைத்துனி, பெருமக்கள்
854, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 18 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 19 - 01 - 1987

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 18 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 88 தொலைபேசி. 24805, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org